# அட்டவணை/ பின்னிணைப்பு

## நிறுவனத்தின் நோக்கம்

1. கனடாவிலிருக்கும் ஸ்ரீலங்கா சமூகத்தினர், ஸ்ரீலங்காவில் உள்ள இளைஞர்களின் கல்வியை முன்னேற்றும் முகமாக, அவர்களின், ஆரம்ப, மத்திய அல்லது உயர்தரக் கல்வியைத் தொடர்வதற்கு பொதுவாகக் கிடைக்கக்கூடிய புலமைப் பரிசில்கள், சலுகைகள், மற்றும் பிற நிதி உதவிகளை வழங்குதல்.

2. ஸ்ரீலங்கா போன்ற வளர்முக நாடுகளின் வறுமையை ஒழிக்கும் பொருட்டு, ஏழ்மைப்பட்ட, குறைந்த வருமானமுள்ள, அல்லது தேவைகளுள்ள தனிநபர்கள் அல்லது குடும்பங்களுக்கு, உணவு, சுத்தமான தண்ணீர், உடை அல்லது தங்குமிடம் உட்பட அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கு உதவுதல்.

3. ஸ்ரீலங்கா போன்ற வளர்முக நாடுகளின் வறுமையை ஒழிக்கும் பொருட்டு, ஏழ்மைப்பட்ட, குறைந்த வருமானமுள்ள, அல்லது தேவைகளுள்ள தனிநபர்கள் அல்லது குடும்பங்களுக்கு சிறு கடன்களைக் கொடுப்பதன் மூலம் நிதிஉதவி செய்தல்.

4. ஊனமுற்றோர் தொடர்பான பிரசினைகளை அகற்றவும், வறுமையைப் போக்கவும், மற்றும் கல்வியை முன்னேற்றவும், ஸ்ரீலங்காவில் உள்ள ஊனமுற்றோர், ஏழைகள், அல்லது குறைந்த வருமானம் அல்லது தேவைகளையுடைய தனிநபர்களுக்கு அல்லது குடும்பங்களுக்கு வேலைப் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு தொடர்பான உதவிகளை வழங்குதல்.

5. ஸ்ரீலங்காவில் வசித்துக்கொண்டிருக்கின்ற, ஆரோக்கியத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் முகமாக, சுகாதார சேவைகள், அல்லது உடல் நலம் மற்றும் தினசரிவாழ்க்கை ஆகியவற்றிற்கு எதிரான கடுமையான அச்சுறுத்தல்களைத் தடுக்க்கூடிய பொருட்களை வழங்குதல்.

6. போர் மற்றும் வன்முறையின் விளைவாகப் பாதிக்கப்பட்டுள்ள, கனடாவில் வசிக்கும் ஸ்ரீலங்கா சமுகத்தினர் மற்றும் தனி நபர்களுக்கு, மனவள மேம்பாடு தொடர்பான ஆலோசனை, மற்றும் தகவல்கள், கருத்தரங்குகள், கருத்துப்பட்டறைகள், அவர்களைக் குழுக்களாகச் சேர்த்துத் திட்டங்களைச் செயற்படுத்தல், அல்லது குழுக்களாக ஒன்றிணைத்து சிகிச்சைத் திட்டங்களுக்கு வழிவகுத்தல்.

7. ஸ்ரீலங்காவில் வசிக்கும் மூத்த குடிமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் களைவதன் பொருட்டு, அவர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட குடியிருப்பிடங்கள், அவ்வப்போது தேவைப்படக்கூடிய வசதிகள் ஆகியவற்றை வழங்கி உதவுதல்.

8. பொதுமக்களின் பயன்பாட்டு நலனைக் கருத்திற்கொண்டு, ஸ்ரீலங்காவின் விவசாயம், மீன்பிடித்தொழில், மற்றும் உற்பத்தித்தொழில்களில் ஈடுபடும் தனிநபர்களின் செயல்திறன், அவற்றின் தரம்மிக்க நடைமுறைகளைப் பேணி மேம்படுத்தல் தொடர்பான பயிற்சியையும் அவற்றுக்கான நிதியையும் வழங்குதல்.

9. ஸ்ரீலங்காவிலும் கனடாவிலும் வசிக்கும் ஸ்ரீலங்கா குடும்பங்கள், பெண்கள் ஆகியோர் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைத் தடுக்குமுகமாக, பெற்றோர், பெண்கள், குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சிகள், கருத்துப் பட்டறைகள், கோபத்தைக் கட்டுப்படுத்தும் முறைமைகள், முரண்பாடுகளைத் தீர்க்கும் முறைகள், பயனுள்ள வகையில் தொடர்பாடல் போன்ற பயிற்சி நெறிகளை ஒழுங்குபடுத்தல்.

10. ஒரு நிதியை அல்லது பல நிதியங்களைப் பெற்று அவற்றைப் பேணி, அதை முழுமையாகவோ, அல்லது அதன் மூலம் அவ்வப்போது பெறும் வருமானத்தின் ஒரு பகுதியையோ கனடாவின் வருமான வரிச்சட்டத்தின் கீழ்ப் பதியப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கு அளித்தல்.

*தமிழாக்கம்: அகா*